**சர்வதேச பத்திரிகை எழுத்தாளர் கூட்டமைப்பின் கிட்டிய கடந்தகாலத் தலைவரும் இலங்கை, கொழும்பு, லசந்த விக்கிரமதுங்க நினைவு விழாவுக்கான ஊடக, பொழுதுபோக்கு மற்றும் கலைக்கூட்டணியின் கூட்டிணைப்புச் செயலாளருமான கிறிஸ்தோபர் வாறன் அவர்களுக்கான உரைக்குறிப்புகள்**

பெப்ருவரி 15, 2011

சனநாயகம், மனித உரிமைகள், பேச்சுச் சுதந்திரம் மற்றும் பத்திரிகைச் சுதந்திரம் ஆகியவற்றில் நம்பிக்கை வைத்துள்ள எம்மவருக்குக் கடந்த சில வாரங்கள் மகிழ்ச்சியளிப்பனவாயுள்ளன.

முதலில் ரியூனீசியாவும், இப்போது எகிப்தும் சுதந்திரமான சனநாயக சமுதாயங்களை நோக்கிய விறுவிறுப்பான, ஆவேசமிக்க பயணத்தில் ஈடுபட்டுள்ளன. அப்பயணத்தின் ஆகக் கஷ்டமான பகுதி இனித்தான் வரப்போகின்றதென்பதிலும் இன்றியமையாதவாறு இவற்றைப் பின்பற்றப் போகின்ற அந்த நாடுகளுக்கும், ஆதிக்கங்களுக்கும் சனநாயகத்தின் நண்பர்களும், ஆதரவாளர்களுமான சர்வதேச சமூகத்தின் சாத்தியமான ஆதரவு முழுவதும் தேவைப்படுமென்பதிலும் சந்தேகத்திற்கிடமில்லை. வட ஆபிரிக்காவின் நிகழ்வுகள் அவற்றின் சொந்தக் காரணத்தினால் மட்டும் கிளர்ச்சியூட்டுவனவல்ல. அவை உலகுக்கே ஒளிவிளக்காயுள்ளன. பகுதியளவில் இதற்குக் காரணம் ஆபிரிக்காவிலும், மத்திய கிழக்கிலும் ஒருமைய ஆடுனராக விளங்கும் எகிப்தின் முக்கியத்துவம். அது அப்பிராந்தியத்திலுள்ள ஒவ்வொரு நாட்டையும் இக்கேள்வியை எதிர்கொள்ள நிர்ப்பந்திக்கும்: எகிப்தினால் முடியுமென்றால், ஏன் எம்மால் முடியாது?

ஆனால், அது அதன் சொந்த எல்லைகளுக்கும், அதன் சொந்தப் பிராந்தியத்துக்கும் அப்பால் முக்கியமானது. அது முக்கியமானது ஏனென்றால் சனநாயகத்தையும், மனித உரிமைகளையும் நோக்கிய உலகளாவிய அணிவகுப்பின் புதிய தொடக்கத்தை அது குறிக்கின்றது.

கடந்த தசாப்தத்தின் போது இந்த அணிவகுப்பு இரண்டு செல்வாக்குகளின் நிமித்தம் தடுமாற்றம் கண்டுள்ளது. முதலாவதாக, பயங்கரவாதத்தின் மீதான அவப்பெயர் கொண்ட உலகளாவிய யுத்தம், பாதுகாப்பின் பெயரில் மனித உரிமைகள் மீதான கட்டுப்பாடுகளை நியாப்படுத்துவதற்கும், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுதல் என்ற பெயரில் எதேச்சாதிகார ஆட்சிகளுடன் இணங்கிப் போகும்படி சனநாயக உலகை ஊக்குவிப்பதற்கும் ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் ஆயுதப்படைகளைப் பயன்படுத்தி சனநாயகம் பரவுதலுக்கு எரியூட்டுவதற்கும் துணைபோனது.

அதே சமயத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் கடும் கண்டிப்பான எதேச்சாதிகார ஆட்சியினுள் சீனாவின் பொருளாதார வளர்ச்சியானது ஊழல் நிலவிய போதிலும் கொடுங்கோலன் ஆட்சியில் தான் மிகச் சிறந்த பொருளாதார வளர்ச்சி இடம்பெறுகின்றதென்று எதேச்சாதிகாரப் போக்குகளைக் கொண்ட தலைவர்கள் நேசிக்கின்ற கட்டுக்கதைக்குப் புத்துயிரளித்தது.

ரியூனீசியாவிலும், எகிப்திலும் ஏற்பட்ட எழுச்சிகள் இந்த இரண்டு பொய்களுக்கும் முற்றுப்புள்ளியொன்றை வைத்தன. அவை சனநாயகத்தின் ஊடாக மட்டும்தான் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட முடியுமென்கின்றதும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பதன் மீது கட்டியெழுப்பப்பட்ட ஒரு சனநாயகம்தான் ஊழலை ஒழிக்கின்ற உறுதியானதும், துடிப்பானதுமான பொருளாதாரமொன்றுக்கு உத்தரவாதமளிக்க முடியுமென்கின்றதுமான புரிந்துணர்வை மீண்டும் கிளப்பியுள்ளன.

ரியூனீசியாவினதும், எகிப்தினதும் உதாரணங்களை அந்தளவு விறுவிறுப்பானவையாக்குகின்ற மற்றுமொரு வளர்ச்சி உள்ளது. உலகெங்கும் சனநாயகத்துக்காக உழைத்து வந்துள்ள அதே குழுக்களால் - மனித உரிமை மற்றும் பத்திரிகைச் சுதந்திர ‘என்ஜிஓ’க்கள், சுயாதீனமான தொழிற்சங்கங்கள் மற்றும் உழைக்கும் பத்திரிகை எழுத்தாளர்கள் - அவை ஊக்குவிக்கப்பட்டுள்ளன.

எனக்கு - லசந்தவுக்கும் அவ்வாறே இருக்குமென நான் நினைக்கின்றேன் - குறிப்பாகப் பத்திரிகை எழுத்தாளர்களின் உதாரணம் எழுச்சியூட்டுகின்றது. நாம் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும். குறிப்பாகப் பெரும்பாலான ஊடகங்கள் அரசுக்குச் சொந்தமானவையாயுள்ள எகிப்தைப் போன்ற நாடுகளில் அனேக பத்திரிகை எழுத்தாளர்கள் எதேச்சாதிகார ஆட்சியாளர்களிடமிருந்து நல்ல பயனைப் பெற்றுக்கொள்கின்றார்கள். அவர்களுக்கு அந்தஸ்துக்கான சலுகைகளும், பொதுமக்களின் அங்கீகாரமும் கிடைக்கின்றது. அவர்கள் அரசியல் பிரபலஸ்தங்களுடன் கூடிக்குலாவி உரையாடுவதற்கும், சனாதிபதியுடன் கூடிக்குடித்து மகிழ்வதற்கும் அழைக்கப்படுகின்றனர். ஒப்பீட்டளவில் அவர்களுக்குத் தாராளமான சம்பளம் வழங்கப்படுகின்றது. எமது சகாக்களில் அனேகர் வசதியும் விட்டுக்கொடுப்புமென்ற பொறியில் சிக்கிவிடுகின்றனர்.

எனினும், உலகெங்கும் அடுத்தடுத்த சனநாயகப் புரட்சிகளில் காண்கின்றவாறு, தனிப்பட்ட உழைக்கும் பத்திரிகை எழுத்தாளர்கள் - குறிப்பாக எழுச்சிபெறுகின்ற சந்ததியினர் - வட ஆபிரிக்கக் கிளர்ச்சிகளின் மத்தியில் தம்மை நிறுத்திக் கொள்வதற்கு முண்டிச் சென்றுள்ளனர். அரசுக்குச் சொந்தமான ஊடாகங்களினுள் கூடப் பத்திரிகை எழுத்தாளர்கள் ஒரு சுதந்திரமான ஊடகத்துக்காக அரசினதும், ஆட்சிபுரியும் உயர்குடியினதும் அக்கறைகளையன்றி மக்களின் நலன்களுக்காக அறிக்கையிடும் உரிமைக்காகப் போராடியுள்ளதுடன், வெற்றியும் கண்டுள்ளனர். சிலர் தமது பத்திரிகை எழுத்தாண்மைக் கோட்பாடுகளை விட்டுக்கொடுத்தலை விடுத்து வெளிநடப்புச் செய்துள்ளனர்.

இப்போது தாம் சுதந்திரமான பொதுமக்கள் சேவை ஒலிபரப்பு மற்றும் வெளியீட்டுக் கோட்பாடுகளின் மீது கட்டியெழுப்பப்பட்டனவாக அரசுக்குச் சொந்தமான ஊடகங்கள் தளர்த்தப்பட்டுச் சனநாயகமயப்படுத்தப்படுதல் மற்றும் சுயாதீனமான, தனியார் ஊடகங்கள் பலப்படுத்தப்படுதல் என்பவை சாத்தியமாகின்ற வகையில் போராட்டங்கள் பயனளிப்பதைக் காண்கின்றோம்.

ஏனைய எதனையும் விட இச்சீர்திருத்தங்கள் தான் எகிப்திய மற்றும் ரியூனீசிய சனநாயகம் தொடர்ந்தும் பொங்கியெழுந்து முன்னேறிச் செல்லுதலை உறுதிப்படுத்தும்.

எனவே, கொஞ்சநஞ்சமின்றி இங்கு இலங்கையிலும், வட ஆபிரிக்காவிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய அனேக பாடங்கள் உள்ளனவென்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

நான் கூறியவாறு, கடந்த தசாப்தத்தின் போது உலகின் பெரும் பகுதியில் சனநாயகம் முன்னேறுவதாகப் பாவித்துக் காலம் கடத்திக் கொண்டிருந்துள்ளது. இலங்கையில் அது அவ்வாறிருந்திருக்குமா? அதற்குப் பதிலாக அது பின்னோக்கிச் சென்றுள்ளது. 2005இல் சிவராமினதும் ஈராண்டுகளுக்கு முன்னர் லசந்த விக்கிரமதுங்கவினதும் படுகொலைகள், திஸ்ஸவினதும், ஜெசிகரனதும், வளர்மதியினதும் வழக்கு விசாரணைகள், பொத்தல, சனத் மற்றும் சுனந்த போன்ற நண்பர்கள் செயல்விளைவில் நாடு கடத்தப்படல் அத்துடன் கடந்த ஆண்டு பிரசீத் எக்னலிகொட காணாமற் போனமை என்பவை எல்லாம் அச்சீரழிவுக்குச் சான்றாக உள்ளத்தை உறையச் செய்யும் நினைவுத்தூபிகளாக நிலைத்துள்ளன. இவை ஒவ்வொன்றும் அச்சீரழிவின் வெவ்வேறு கட்டங்களைக் குறிக்கின்றன. சிவராமின் படுகொலையும், திஸ்ஸ, ஜெசிகரன் மற்றும் வளர்மதியின் தேசத் துரோக வழக்கு விசாரணைகளும் அவற்றுக்கே உரித்தான சொந்த முறையில் இலங்கை அரசாங்கத்தினதும் எல்ரிரிஈயினதும் ஒரு பொதுவான இலக்கைக் குறித்தன - அதாவது தமிழ்ச் சமூகத்தில் எந்தவொரு சுதந்திரமான கேள்வி கேட்கும் வாய்ப்பையும் ஒழித்துக்கட்டுதல்.

பொத்தல ஜயந்தவும் ஏனையோரும் அடித்து உதைப்பட்டமையும், மேலும் அனேக நண்பர்கள் நாடு கடந்தோட நிர்ப்பந்திக்கப்பட்டமையும், எகிப்தும் ரியூனீசியாவும் காட்டுகின்றவாறு அதிகரித்துவரும் எதேச்சாதிகார ஆட்சிபுரியும் உயர் குடியினருக்குப் பெரும் சவாலாயிருக்கக்கூடிய அத்தகைய சுயாதீனமான பத்திரிகை எழுத்தாளர்களின் வலையமைப்பையும், மனித உரிமை ‘என்ஜிஓ’க்களையும், ஊடகங்களிலுள்ள சுதந்திரமான தொழிற்சங்கங்களையும் ஒழிப்பதற்கான முயற்சியைக் குறித்தன.

லசந்தவின் படுகொலையும் பின்னர் பிரசீத் காணாமற்போனமையும் கேள்வி கேட்கின்றதும் சவால்விடுகின்றதுமான ஓர் ஊடகத்தை ஒழிப்பதற்கான முயற்சியைக் குறித்தன. இவ்விரு நிகழ்ச்சிகளும் அனுப்பிய செய்தியைக் கேட்டிராதவரும் விளங்கிக்கொள்ளாதவருமான பத்திரிகை எழுத்தாளரொருவர் இந்நாட்டில் உள்ளாரென்பது எனக்குச் சந்தேகமே.

'எனவே அவர்கள் என்னைத் தேடி வந்தார்கள்' (And Then They Came for Me) என்று லசந்தவின் கல்லறையிலிருந்து வெளிப்படும் வலிமையான செய்தி, கட்டுப்பாடற்ற, சுதந்திரமான பத்திரிகைத் துறையின் மீதான தாக்குதல்கள் வெற்றிடமொன்றிலிருந்து வரவில்லை - மாறாக சனநாயகத்துக்கும் மனித உரிமைகளுக்கும் எதிராக ஒன்றுபட்டுத் திட்டமிட்ட முயற்சியின் ஒரு பகுதியாகத்தான் அவை வந்தனவென்று எவ்வளவு நன்கு அவர் விளங்கியிருந்தாரென்பதைக் காட்டுகின்றது. அதேபோன்று வட ஆபிரிக்காவில் எமது சகாக்களில் அனேகரின் நடவடிக்கைகள், கட்டுப்பாடற்றதும் சுதந்திரமானதுமான பத்திரிகைத் துறை மனித உரிமைகள் மீது கட்டியெழுப்பப்பட்ட ஒரு சுதந்திரமான, சனநாயக சமுதாயத்தில்தான் உயிர்வாழ முடியுமென்பதை இவ்வாண்டில் எமக்கு நினைவூட்டியுள்ளன.

ஒரு சுதந்திரமான இலங்கைக்கும் அனைத்துலக மனித உரிமைப் பிரகடனத்துக்கும் கிட்டத்தட்ட ஒரே வயதுதான். எனவே மனித உரிமைகளுக்கான சவாலானது தொடக்கத்திலிருந்தே ஒரு சுதந்திரமான இலங்கையின் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்துள்ளதென்பதில் வியப்பதற்கு எதுவுமில்லை. அவ்வரலாறு மிகத் தொடக்க நாட்களில் மலைநாட்டுத் தமிழர்களின் பிரசாவுரிமை மறுக்கப்பட்டது முதற்கொண்டு லசந்த படுகொலை செய்யப்பட்டதும் பிரசீத் காணாமற் போனதும் வரையிலான மனித உரிமைத் துர்ப்பிரயோகங்களைக் கொண்டு தடுக்கப்பட்ட ஒரு வரலாறாயிருந்துள்ளது. அது 1983இல் தமிழருக்கு எதிரான கொழும்பு இனப்படுகொலையிலிருந்து உலகுக்கு எல்ரிரிஈயின் நினைவை விட்டகலாத நன்கொடையாக வழங்கப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதல்கள் வரையில் உலகின் மிகப் பயங்கரமான நிகழ்ச்சிகள் சிலவற்றை உள்ளடக்கியுள்ளது.

இம் மனித உரிமைத் துர்ப்பிரயோகங்களைச் சமநிலைப்படுத்துவதாக, சில சமயங்களில் குறைபாடுள்ள, போதுமானதற்ற சனநாயகம் நீடித்துநிலைத்திருந்துள்ளது. ஒரு சுதந்திரமான நீதித் துறையின் போலித் தோற்றமொன்று எஞ்சிப் பிழைத்துள்ளது. சிவில் சமுதாயம் வளர்ச்சிகண்டுள்ளது.

இலங்கையின் வரலாற்றில் எது மனித உரிமைகளை அவ்வளவு ஆழமாக பின்னிப் பிணைத்துள்ளதென்றால் அது மிக மோசமான சமுதாயமாக இருந்ததுமில்லை, மிகச் சிறந்த சமுதாயமாக இருந்ததுமில்லை என்பதுதான். நாட்டின் சுதந்திரத்தின் தொடக்கத்திலிருந்தே மனித உரிமைகள் தான் போராட்டத்தின் மையமாக இருந்துள்ளன.

உண்மையில் இலங்கையின் வரலாறு மனித உரிமைகளுக்கான போராட்டத்தின் ஒரு வரலாறாகத்தான் எழுதப்படவும் விளங்கிக் கொள்ளப்படவும் முடியுமென்று நான் நீண்ட காலமாக நம்பிவந்துள்ளேன்.

லசந்தவின் படுகொலையைத் தொடர்ந்து கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் தான் போராட்டத்தின் மையமாகியுள்ளது. ஏனெனில் கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரத்துக்கான உரிமையில்லாமல் மனித உரிமைகள் மீது தாபிக்கப்பட்ட ஒரு சமுதாயம் இருக்க முடியாது. மேலும் மனித உரிமைகள் மீது தாபிக்கப்பட்ட ஒரு சமுதாயம் இல்லாமல் கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் இருக்கமுடியாது.

கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் வேறு சில உரிமைகளுக்கு நேரடியாக ஆதாரமாயுள்ளது - உங்கள் சமயத்தைச் சுதந்திரமாகப் பின்பற்றுவதற்கான உரிமை, சமாதானமாக ஒன்றுகூடுவதற்கான உரிமை, அதேபோன்று பேச்சுச் சுதந்திரம் அல்லது இவை எல்லாவற்றிலும் குறுகியதான ஊடகச் சுதந்திரம். சுதந்திரமாகக் கருத்து வெளிப்படுத்தும் உரிமை இல்லாமல் இவ்வுரிமைகளில் எதுவும் இருக்கமாட்டாது. அது பெண்களினதும், சிறுபான்மைக் குழுக்களினதும், வசதிகுறைந்த குழுக்களினதும் உரிமைகளுக்கு இன்றியமையாதது. அவர்கள் தாமே கருத்தை வெளிப்படுத்துவதற்கான தமது சொந்தச்

சுதந்திரத்தின் ஊடாக வலுப்படுத்தப்படாமல் வேறுவகையில் வலுப்படுத்தப்பட முடியாது. அதனால்தான் வசதிகுறைந்தவர்களின் போராட்டங்களுக்கு கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் ஓர் அளவிலானது என வாதிடுபவர்களுடன் எனக்கு உடன்பாடில்லை. அவர்கள் பேசுவதற்கு வலுவளிக்கப்படாவிட்டால் அப்போராட்டங்கள் தம்மைத்தாமே வெளிப்படுத்துவதற்குச் சொற்கள் தன்னும் இருக்காது. நியாயமான வழக்கு விசாரணையொன்றுக்கான உரிமையுடன் அது பிணைக்கப்பட்டுள்ளது - நியாயமான வழக்கு விசாரணையின் பகுதி பகிரங்கமாக விசாரிக்கப்பட வேண்டுமென்பது.

மேலும் அது ஏனைய எல்லா உரிமைகளுக்கும் ஆதாரமாயுள்ளது. பாதுகாப்புக்கான உரிமைகள், விதிக்கட்டற்ற கைதுக்கு எதிரான உரிமைகள், பிரசாவுரிமைக்கான உரிமைகள், சித்திரவதைக்கு எதிரான உரிமைகள். ஏனெனில் அது ஒரு சுதந்திரமான நீதித்துறையுடன் சேர்ந்து இவ்வுரிமைகளைச் செயற்படுத்துவதற்கான வழிமுறையாயுள்ளது. அதுவே துர்ப்பிரயோகத்தை வெளிப்படுத்துவதற்கான வழிமுறையாயுள்ளது. அவற்றை வெளிப்படுத்துவதன் மூலம் அவற்றை முடிவுக்கு கொண்டுவருகின்றது. கருத்துவெளிப்படுத்தும் சுதந்திரம் தான் வேறு எந்தவோர் உரிமையும் சுதந்திரமாகப் பிரயோகிக்கப்படுதலை இயலச் செய்கின்ற ஊக்கியாயுள்ளது. உண்மையில் பத்திரிகைச் சுதந்திரம் பரந்தகன்ற கருத்துவெளிப்படுத்தும் சுதந்திரத்துக்கான உரிமையின் ஓர் உட்பிரிவாயுள்ள போதிலும் பாரம்பரியமாக இலங்கையில் எமது கலையைத் துணிகரமாகப் பிரயோகிக்கின்ற லசந்த மற்றும் பிரகீத் போன்ற பத்திரிகை எழுத்தாளர்கள் ஊடாகவே மனித உரிமைகளுக்கான போராட்டம் அறிக்கையிடப்பட்டும் அறியச் செய்யப்பட்டுமுள்ளது. அதனால்தான் அவர்களும் வேறும் அனேக பத்திரிகை எழுத்தாளர்களும் குறிவைக்கப்பட்டவர்களாயினர்.

வேறு எந்தவொரு ஆளையும் போன்று ஒரு பத்திரிகை எழுத்தாளருக்கும் கடத்தலுக்கு எதிராகவும், சட்டவிரோத சிறைப்படுத்தலுக்கு எதிராகவும், சித்திரவதைக்கு எதிராகவும், படுகொலைக்கு எதிராகவும் உரிமையுண்டு. எனினும் இப்போது அளவுக்கதிகமான பத்திரிகை எழுத்தாளர்கள் அறிக்கையிடுவதனால், பகுப்பாய்வு செய்வதனால், கேள்விகேட்பதனால், சுருக்கமாகச் சொல்வதாயின் தமது வேலையைச் செய்வதனால் இலங்கையில் மனித உரிமைத்துர்ப்பிரயோகமென்ற நச்சுச்சுழியில் சிக்குண்டவர்களாயுள்ளனர். எனவேதான் லசந்த படுகொலை செய்யப்பட்டார், பிரகீத் காணாமற் போனார். இத்தகைய சூழலில் நிலைமை ஒருபோதும் திருந்தாதென்று இலகுவில் எண்ணிவிடலாம்.

ஆனால் ரியூனீசியாவும் எகிப்தும் காலத்தைக் கடத்தும் தசாப்தம் முடிந்து விட்டதைக் காட்டுகின்றன.

எனினும் எதேச்சாதிகார ஆட்சி - மனித உரிமைகளின் துர்ப்பிரயோகத்தை மூடிமறைப்பதற்குத் தேர்தல்களென்ற பகட்டுப் பூச்சைப் பயன்படுத்துகின்ற மென்வகை எதேச்சாதிகாரம் கூட - மக்களை ஏமாற்றிவிட்டது.

எனவே வேறுபாடொன்றைச் செய்வது பத்திரிகை எழுத்தாளர்களின் கைகளில் தான் உள்ளது - ஆனால் நாம் மட்டும் தனித்து இதனைச் செய்யமுடியாது.

எமது சமூகங்களுக்குத் தகவல்களுக்கான ஒரேயொரு வழியாக நாம் வழமையாக அனுபவித்து வந்த ஏகபோக உரிமையைத் தோன்றிவருகின்ற தகவல் தொழில்நுட்பங்கள் தகர்க்கின்றன.

இதற்கு மேலும் இப்போது செய்திப்பத்திரிகைகளும் வானொலியும் தொலைக்காட்சியும் தகவல்களுக்கான தனியொரு மூலமல்ல. ருவிட்டர் மற்றும் ஃபேஸ்புக் மற்றும் வெப் 2.0 போன்ற புளொக்கர்கள், பிரசைப் பத்திரிகை எழுத்தாளர்கள் மற்றும் செய்தி வெப் தளங்கள் போன்ற சமூக ஊடகங்கள் எல்லாம், அவற்றில் எதுவுமே சுயாதீனமான பத்திரிகை எழுத்துத்துறைக்கு ஒரு பதிலீடாக இல்லாதபோதிலும், அளவிடமுடியாதவாறு இக் கூட்டில் இணைந்துள்ளன. அண்மையில் லங்கா ஈ நியூஸ் எரிக்கப்பட்டதிலிருந்து உயர்குடியினருக்கு அவை விடுக்கும் சவாலை நாம் காணக்கூடுமாயுள்ளது. எனினும் அவை வெறுமனே தகவலின் மொத்த அளவைக் கூட்டுவதுடன் நின்றுவிடவில்லை. இத் தொழில்நுட்பங்களின் வாய்ப்புவளம் அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள் பின்பற்றியுள்ள அடிப்படையைத் தகர்த்துள்ளது.

அவை அரசுக்குச் சொந்தமான ஊடகங்களை நடத்துவதற்கு அரசியல் நியமனங்கள் மூலமும் சுயாதீன ஊடகங்களைக் கைவிடும்படி விளம்பரதாரர்களை நெருக்குவதன் மூலமும், பத்திரிகை எழுத்தாளர்களை அச்சுறுத்துவதன் மூலமும், தூற்றுவதன் மூலமும், படுகொலை செய்வதன் மூலமும் செய்திகளினதும் தகவல்களினதும் வழியை அடைத்துவிடமுடியாது.

அதே சமயம் ரியூனீசியாவிலும் எகிப்திலும் எழுச்சிகள் அதேயளவுக்கு எதேச்சாதிகார ஆட்சியின் பொருளாதாரத் தோல்விகளால் தூண்டப்பட்டன என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும் - மேலும் இதுவே “சீன மாதிரி” என்றழைக்கப்படுவதற்கெதிரான பேரடியாகும்.

ஒவ்வொரு பொருளியலாளருக்கும் தெரிந்துள்ள விடயம் கெய்ரோவில் தஹ்ஹிர் சதுக்கத்திலுள்ள மக்களுக்குத் தெரியும். மென்மையானதோ கடுமையானதோ, எதேச்சாதிகார ஆட்சி இன்றியமையாதவாறு ஊழலை மூடி மறைக்கின்றது. மேலும் ஊழல்தான் உண்மையான பொருளாதார வளர்ச்சிக்கும் சாதாரண மக்களுக்குக் கண்ணியமான வாழ்க்கைத் தரத்துக்கும் பிரதான தடையாயுள்ளது.

அதிகரிக்கும் விலைகள், வேலைவாய்ப்பின்மை, குறைவேலைவாய்ப்பு, ஊழல் - சனநாயகம் மட்டும்தான் இச்சவால்களை எதிர்கொள்ளக்கூடியது.

இவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல், மனித உரிமைகளும் கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரமும் என்று வருகின்றபோது இலங்கை அரசாங்கம் இறுதியுத்தத்தில் போராடுகின்ற ஒரு தளபதியைப் போன்று 1980களில் நல்ல வெற்றியளித்த தந்திரோபாயங்களைப் பயன்படுத்திக்கொண்டு இப்போது அவை ஏன் வெற்றியளிக்கவில்லையென்று விளங்க முடியாது தவிக்கின்றது. அதனை விளங்கிக் கொள்வதற்கு அவர்கள் போராடுகின்ற வேளையில் அரசாங்கமும் அவர்களின் இராணுவமும் துணை இராணுவப் படைகளும் மேலும் கூடிய மூர்க்கத்துடன் தாக்கியதுடன், நாமெல்லோரும் வாழ்கின்ற உலகை அவர்கள் புரிந்துகொள்ளத் தவறியதனால் மேலும் கூடிய பத்திரிகை எழுத்தாளர்களும் பலியாக்கப்பட்டனர்.

அதனால் குறுகிய காலத்துக்கு அவர்கள் மேலோங்கியிருந்தனர். ஆனால் இப்போது பத்திரிகை எழுத்தாளர்களாக, சனநாயகத்திலும் மனித உரிமைகளிலும் நம்பிக்கையுள்ளவர்களாக எமக்குள்ள சவால் வட ஆபிரிக்கா வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ள வரலாற்றுச் சுழற்சியை கைவசப்படுத்துவதாகும்.

நாம் இப்போதுள்ள சனநாயகம் பாதுகாப்புக்கான உரிமை மற்றும் கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரத்துக்கான உரிமை உட்பட மனித உரிமைகளைக் கொண்டு பக்குவப்படுத்தப்படுவதற்கு இலங்கையிலுள்ள எல்லா மக்களினதும் அடிப்படை உரிமையை மீண்டும் உறுதிசெய்ய வேண்டும்.

இலங்கையைப் போன்று எனது நாடும் ஒரு தீவுதான். எனினும் சனநாயகத்தினதும் மனித உரிமைகளினதும் உலகளாவிய அணிவகுப்பு மீண்டும் ஆரம்பிக்கின்றபோது எந்தவொரு நாடும் நீண்ட காலத்துக்குத் தீவாக இருக்கமுடியாது.